[பேரவைத் தலைவர்]

அரசு நடைபெற முடியும். அரசினருக்குப் பணம் கொடுப்பதற்கான உரிமை பேரவைக்கு மட்டுமே இருக்கிறது. தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இப் பேரவை, நிதி ஒதுக்கிக் கொடுக்ககவில்லையென்றால், அரசினரின் ஊழியர்களுக்குக் கூட ஊதியம் கொடுக்க முடியாது.

எனவேதான், நிதி ஒதுக்கும் மசோதா நிறைவேற்றப்படும் வரை, பேரவை தங்குதடையின்றி நடைபெற வேண்டும் என்பதற்காக, பேரவையின் நடவடிக்கைகளைத் தள்ளிவைக்க வேண்டுமென்ற தீர்மானம் அனுமதிக்கப்படுவதற்கில்லை. எனவே, பேரவைத் தலைமையுடன், இதில் ஒத்துழைக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திரு. குமாரசாமி அவர்கள் கோரிய அனுமதி மறுக்கப்படுகிறது.

3. அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அறிவிப்பு ஒன்று உள்ளது. 22-6-67-ல் கூடிய அலுவல் ஆய்வுக்குழு 1967-68-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பதற்காக, உறுப்பினர்கள் எல்லோரும் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளபடி 28-6-67-லிருந்து, 15-7-67-வரை நிகழ்ச்சி நிரலைத் தீர்மானித்திருக்கிறது என்பதை அறிவிக்கிறேன்.

(இ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1967-ம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) மசோதாவை, இந்த அவைக்குக் கொண்டுவருவதற்கு மேன்மைமிகு கவர்னர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அம்மசோதாவை அறிமுகப்படுத்த பேரவையின் அனுமதியைக் கோருவார்கள்.

4. அரசினர் மசோதாக்கள்.

(அ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: மசோதாவை அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்பமிகு பேரவைத்தலைவர்: மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

---

* 562—563-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது